# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

## CC NO. 554/2025

**Date : 26.11.2025** **PW 4/ LW5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மருதுபாண்டி | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | முருகன் | தொழில் | ஊராட்சி மன்ற தலைவர் |
| கிராமம் | பெரும்பட்டு | வயது | 35 |
| எதிரிகள் 1, 2 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் பெரும்பட்டு கிராமத்தில் வசித்து ஊராட்சி மன்ற தலைவராக இருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நண்பகல் 12.00 மணியளவில் எங்கள் கிராமத்தில் பஞ்சாயத்து அலுவலகத்தில் இருந்தபோது திருநாவலூர் போலிசார் விருத்தாம்பாளுக்கும் மஎதிரிக்கும் நடந்த சண்டை வழக்கு தொடர்பாக வரைபடம் வரைந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக மாறியதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை**

கடந்த 24.04.2023 அன்று மதியம் 1.00 மணியளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த ராமர் என்பவரும் விருத்தாம்பாள் நிலத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்தபோது திருநாவலூர் காவல் நிலைய குற்ற எண்.196/2023 வழக்கு சம்மந்தமாக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள்எனவும் அதில் நானும் மேற்படி ராமரும் கையொப்பம் செய்தோம் என்றும்

போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளை இவ்வழக்கில்மஇருந்து காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

. Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

## CC NO. 554/2025

**Date : 26.11.2025** **PW 3/ LW4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமர் | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | பண்டேரி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பெரும்பட்டு | வயது | 57 |
| எதிரிகள் 1, 2 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் பெரும்பட்டு கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை எப்போது செய்தேன் என்றால் கடந்த 2023 -ம் ஆண்டு ஒருநாள் சுமார் காலை 10.00 மணியளவில் நான் எனது வயலுக்கு சென்றபோது திருநாவலூர் போலிசார் அங்கு வந்து விருத்தாம்பாளுக்கும் எதிரிகளுக்கும் நடந்த சண்டை வழககு தொடர்பாக சம்பவ இடத்தை பார்வை இட்டு வரைபடம் வரைந்து கொண்டு அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். **பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

புகார் தாரரும் மேற்படி எதிரிகளும் பக்கத்து நிலத்துக்காரர்கள் என்றால் சரிதான். ஏற்கனவே புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் வாய்தகராறு இருந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் புகார் கொடுக்க நானும் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். நான் பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்று சொன்னால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் கையொப்பம் செய்த தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை- இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd. Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

**CC NO. 554/2025**

**Date : 26.11.2025** **PW 2/ LW3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஏழுமலை | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | ஆறுமுகம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பெரும்பட்டு | வயது | 20 |
| எதிரிகள் 1, 2 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் பெரும்பட்டு கிராமத்தில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விருதாம்பாள் எனது அம்மா. 1, 2 எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 17.04.2023 அன்று சுமார் 4 – 4.30 மணியளவில் நான் கல்லூரி முடிந்து வீட்டிற்கு வந்த போது எனது பக்கத்து வீட்டில் வசித்துவரும் ஏழுமலை என்பவர் எதிரிகள் இருவரும் எங்களது வயலில் எனது அம்மா விருதாம்பாளை அடித்துவிட்டதாக என்னிடம் கூறினார். நான் வயலுக்கு சென்று பார்த்தபோது என் அம்மாவிற்கு வலது காலில் காயம் இருந்தது. இடுப்பில் கருப்பு நிற ரத்தக்கட்டு காணப்பட்டது. உடனே நான் எனது அம்மாவை உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நான எனது அம்மாவை விசாரித்தபோது எதிரிகள் இருவரும் மண்வெட்டியால் அடித்து காலால் எட்டி உதைத்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக கூறினார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 விருத்தாம்பாளுக்கும் எதிரிகளுக்கும் வரப்பில் மாடு மேய்த்தது சம்பந்தமாக சண்டை என்று எனது அம்மா என்னிடம் கூறினார். சம்பவம் நடந்த அன்றே போலிசார் என்னை மருத்தவமனையில் வைத்து விசாரணை செய்தனர். எனது அம்மாவை எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் அவரையும் மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தனர். அதன் பிறகு வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. புகாரை மருத்துவமனையில் வைத்து எனது அம்மா கூற எனது அண்ணனின் நண்பர் ஒருவர் எழுதினார். அதில் எனது அம்மா கைரேகை வைத்தார். அந்த புகாரை எனது அண்ணன் ஜெயக்குமார் காவல் நிலையத்தில் கொடுப்பதற்காக எடுத்து சென்றார். எனது அம்மாவிற்கு மாடு மேற்க்கும்போது ஏற்பட்ட காயத்தை

வைத்துக்கொண்டு எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளார்ள ன்றாலோ அதற்கு அனுசரணையாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. எனது அம்மாவிற்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்தது என்று சொன்னால் வாய்தகராறு இருந்தது. வழக்குக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd. Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

**CC NO. 554/2025**

**Date** : 26.11.2025 **PW 1/ LW1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விருத்தாம்பாள் | ஆதார் எண் | |
| கணவர் பெயர் | ஆறுமுகம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பெரும்பட்டு | வயது | 40 |
| எதிரிகள் 1, 2 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் பெரும்பட்டு கிராமத்தில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். 1, 2 எதிரிகளை தெரியும்.அவர்கள் எங்கள் பக்கத்து நிலத்துக்காரர்கள். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 4.00 மணியளவில் எனது வயலுக்கு அருகில் மாடு மேய்த்துக்கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் இருவரும் அங்கு வந்தனர். அதில் 1வது எதிரி சிவபெருமாள் என்னை தேவிடியா, குச்சிக்காரச்சி என திட்டி எனது தலை முடியை இழுத்து போட்டு அடிக்க வந்தார். அப்போது நான் பயந்து ஓடினேன். பின்னால் என்னை துரத்தி வந்து எதிரி சிவபெருமாள் அருகில் இருந்த மண்வெட்டியை எடுத்து இடது காலிலும் இடது கை தோள்பட்டையிலும் அடித்தார். பின்னர் உன்னை வெட்டி புதைத்துவிடுவேன் என கூறினார். எதிரி பூமாதேவி தடியை எடுத்து வந்து என்னை அடித்தார். அதனால் நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். பின்னர் எனது மகன் ஏழுமலை மற்றும் எனது கணவர் ஆறுமுகமும் ஆம்புலன்ஸ் மூலம் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். அந்த புகார் என்னால் கொடுக்கப்பட்டதுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆகும்.** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த அன்றே போலிசார் என்னை வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கைரேகையை நான் எங்கு வைத்து செய்தேன் என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சம்பவம் நடந்த மறுநாளும் போலிசார் என்னை விசாரணை செய்தனர். புகாரை யார் எழுதினர் என்றால் திருநாவலூர் காவல் நிலையத்தில் வைத்து போலிசார் எழுதினர்.

அந்த புகாரை நான் கூற போலிசார் எழுதினர். நான் புகார் கொடுத்துவிட்டு மருத்தவமனை சென்றேனா அல்லது மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்ற பின்பு புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்துவிட்டுதான் மருத்துவமனை சென்றேன்.

2. எனது கணவர் எதிரி 2-ஐ வைப்பாட்டியாக வைத்திருந்தார். அந்த விஷயம் தெரியவந்ததின் பேரில் 1வது எதிரி என்னை அடித்தார். அந்த தகவலை மறைக்கவே நிலத்தகராறு ஏற்கனவே எனக்கும் எதிரிகளுக்கும் உள்ளது என்று புகார் அளித்தேன். நான் கூறுவது போல் எதிரிகள் என்னை அடிக்கவில்்லை என்றாலோ நான் மாடு மேய்க்கும் போது மாடு இழுத்து சென்று விழுந்த காரணத்தினால் ஏற்ப்பட்ட காயத்தை வைத்துக் கொண்டு எதிரிகளை பழிவாங்குவதற்கு பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. சம்பவம் நடந்தபோது சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை. தகவலை அறிந்து எனது மகனும் எனது கணவரும் வந்து என்னை அழைத்து சென்றனர். வழக்குக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd. Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.